OS.No.449/2017

PW 1–திருமால்

த/பெ.

நாள். 31.01.2025.

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் சுமார் 25 ஆண்டுகளாக வழக்கை குறிப்பிட்டிருக்கும் முகவரியில் தான் குடியிருக்கிறேன்.எனக்கு சொந்த ஊர் திருவள்ளூர் மாவட்டம் திருவாலங்காடு ஆகும்.நான் 1999 இல் தான் அங்கு இருந்து திருப்பூர் வந்தேன்.பிரதிவாதி என் மனைவி.அவரும் அதே மாவட்டம் திருவள்ளூர் மாவட்டம் தான் பக்கத்து ஊரை சேர்ந்தவர்.நான் எட்டாம் வகுப்பு படித்து இருக்கிறேன் நான் டெய்லர். பிரதிவாதி பத்தாம் வகுப்பு படித்திருக்கிறார் அவர் வேலைக்கு செல்வதில்லை.எங்களுடையது காதல் திருமணம் தான்.இரு வீட்டாரின் எதிர்ப்பையும் மீறி நாங்கள் பழனியில் வைத்து திருமணம் செய்து கொண்டோம். அதன் பின்பு நாங்கள் இருவரும் திருப்பூரல் தனியாக வீடு எடுத்து வாடகை கொடுத்து தங்கி இருந்தோம். அந்த சமயத்தில் எங்களுக்கு யாரும் பணம் உதவி செய்யாததால் நாங்கள் இருவருமே வேலைக்கு சென்று வந்தோம் என்று சொன்னால் சரியல்ல நான் வேலைக்கு செல்வேன் அதன் பின்பு ஒரு வருடம் சுமாராக என் மனைவி வேலைக்கு சென்று வந்தார். அதன் பின்பு குழந்தை பெற சிகிச்சை எடுத்து வந்ததால் என் மனைவி வேலைக்கு செல்வது கிடையாது.

2. 1999 ஆம் வருடம் நான் வேலை செய்து கொண்டிருந்தார் சமயத்தில் எனக்கு ஒரு நாள் சம்பளம் 300 ரூபாய். மாதம் முழுவதும் வேலை இருக்கும். வீட்டு செலவுகள் எவ்வளவு ஆகும் என்றெல்லாம் எனக்கு தெரியாது அதனை என் மனைவி பார்த்துக் கொள்வார். என்னுடைய வருமானம் தான் எங்கள் குடும்பத்திற்கு பிரதான வருமானம் என்றால் ஆமாம்.

3. என்னுடைய வருமானத்தில் தான் இந்த தாவா சொத்தை கிரயம் வாங்கினேன் என்று சொன்னால் சிறிது சிறிதாக சேர்த்து வைத்து கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்து வாங்கினேன்.தாவா சொத்தை வாங்கிய போது அந்த சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று கேட்டால் அரசு வழிகாட்டு மதிப்பு 21,000 நான் கிரயம் வாங்கியது 60,000 ரூபாய்க்கும்.அந்த 60 ஆயிரம் ரூபாயை நான் எப்படி கொடுத்தேன் என்று கேட்டால் கிரையத்திற்கு முன்பும் பின்பும் சிறிது சிறிதாக தான் கொடுத்தேன்.

4. கிரைய சொத்து பிரதிவாதி பெயரில் தான் கிரயம் வாங்கியது என்றால் ஆமாம். மனைவி என்னுடன் இருக்கிறார் என்னை பார்த்துக் கொள்வார் என்று தான் நான் மனைவி பெயரில் சொத்து வாங்கினேன். தாவா சொத்து என்னுடையதுதான் பெயரளவுக்கு தான் என் மனைவி என்று அவரை கிரயத்திற்காக பெயர் அளவுக்கு சேர்த்து இருக்கிறேன். இந்த சொத்தில் பாதி பங்கு எனக்கு வர வேண்டும் என்று பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கம் செய்திருக்கிறேன்.

5. இந்த வழக்கில் நான் பாகம் கேட்டு தான் பரிகாரம் கோரி இருக்கிறேன். என்னுடைய சொத்தை மட்டும் தான் என்று நான் விளம்புகை செல்லாது என்று தான் நான் பாகப்பிரிவினை கேட்டு இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வழக்கு எனக்கு தெரியும்.தாவா சொத்தில் பாகப்பிரிவினை கேட்க வேண்டிய அவசியம் என்ன என்று கேட்டால் பிரதிவாதி என்னை பிரிந்து அவர் வீட்டுக்கு சென்று விட்டார் அதன் பின்பு நான் டைவர்ஸ் நோட்டீஸ் அனுப்பி இருக்கிறேன் அதனால் சொத்தில் பாதி பங்கு வேண்டும் என்று கேட்டு இருக்கிறேன்.

6. சிகிச்சைக்காக தகப்பன் வீட்டிற்கு சென்ற என் மனைவி திரும்ப வரவே இல்லை.நான் கொடுத்த புகார் என் மனைவி திரும்ப வரமாட்டேன் என்று சொன்னதால் காவல் நிலையத்தில் முடிக்கப்பட்டது பொருட்களை அவர் எடுத்து சென்று விட்டார். 2024 ஆம் ஆண்டு எங்கள் இருவருக்கும் விவாகரத்து நடந்து விட்டது.என்னுடைய சொத்து தான் என்பதை நிரூபிக்க என் கைவசம்

ஆவணம் ஏதுமில்லை என்று சொன்னால் ஆமாம் என்னிடம் இல்லை. அனைத்தையும் அவர் எடுத்து சென்று விட்டார்.தாவா சொத்தை நான்தான் கிரயம் வாங்கினேன் என்பதை நிரூபிக்க ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை.

7. தாவா சொத்தில் இருக்கும் வீட்டை நான் தான் அனுபவத்தில் வைத்திருக்கிறேன் என்றால் ஆமாம்.அந்த வீடு 2007 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. மேற்படி வீடு மற்றும் அதனுடைய மனை ஆகியவற்றில் தான் நான் பாகம் கேட்டிருக்கிறேன்.வீட்டின் மதிப்பு தற்போதைய நிலை எனக்கு தெரியாது. வீடு தனக்கு மட்டுமே பாத்தியம் என்று கேட்டு தான் என் மனைவி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் ஆமாம்.

8. என் மனைவியின் சொந்தக்காரர்கள் 2015 ஆம் ஆண்டுக்கு மேல் தான் எங்கள் வீட்டுக்கு வர ஆரம்பித்தார்கள். என் மனைவி உடல்நலம் சரியில்லாமல் இருந்த சமயங்களில் அவர் அம்மா வந்து பார்க்க வருவார் என்றும் அந்த சமயத்தில் தான் இந்த இடத்தை வாங்க என் மனைவியின் அம்மா தன் கணவரின் பணத்தை கொடுத்து இந்த மனை வாங்கி இருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல .

9. காதல் திருமணம் செய்து கொண்டதால் என் மனைவியின் குடும்பத்தார் அவருக்கு சீர் செய்ய வேண்டும் என்று இந்த தாவா சொத்துக்கான பணத்தை கொடுத்த கிரயம் வாங்கி இருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல .நான் சொல்வது போல் வீடு எதுவும் நான் கட்டவில்லை என்றும் என் மனைவியின் அப்பாவின் ரிட்டயர்மென்ட் பணத்தில் தான் வீடு கட்டப்பட்டது என்று சொன்னால் சரியல்ல .

10. நான் வைத்திருக்கும் ஆவணங்கள் அனைத்தையும் என் மனைவியை எடுத்துச் சென்று விட்டார் அதனால் என்னிடம் ஆவணங்கள் எதுவும் கிடையாது .எந்தெந்த ஆவணங்கள் என்று குறிப்பிட்ட என்னிடம் பட்டியல் எதுவும் கிடையாது. என்னிடம் ஆவணங்கள் எதுவும் இல்லாதபோது நான் வைத்திருந்த

ஆவணங்கள் அனைத்தையும் என் மனைவி எடுத்து சென்று விட்டார் என்று வழக்கிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல .

11. 2017 ஆம் ஆண்டு தாவா சொத்தை என் பெயருக்கு மாற்றி எழுதி தருமாறு நான் என் மனைவியை கேட்டு கொடுமைப்படுத்தியதால் தான் அவர் வீட்டை விட்டு சென்று விட்டார் என்று சொன்னால் சரியில்ல .நான் அனுபவித்து வரும் வீட்டை நான் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கில் தான் இப்படி வழக்காடி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல .தாவா சொத்தை கிரயம் வாங்கும் அளவிற்கு எனக்கு வருமானமும் இல்லை தகுதியும் இல்லை என்று சொன்னால் சரியல்ல சிறிது சிறிதாக சீட்டு போட்டு தான் வாங்கி இருக்கிறேன் .தாவா சொத்தில் எனக்கு பாகம் கிடைக்க வேண்டும் என்ற பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரி அல்ல. தாவா சொசத்தை பிரதிவாதி வசம் சுவாதீனம் கொடுக்க வேண்டும் என்றும் சொன்னால் சரியில்லை .

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V SREE VIDYA

Digitally signed by V SREE VIDYA
DN: cn=V SREE VIDYA, ou=JUDICIAL JUDGE , o=THE PRINCIPAL SUBORDINATE COURT , l=TIRUPPUR, st=TAMIL NADU, c=91

முதன்மை சார்பு நீதிபதி,

திருப்பூர்.